**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 246/2022 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | பெ.பாலசுப்பிரமணியன் |
| Father's/Husband Name: | : | பெரியசாமி |
| Address : | : | 1, ஆசைத்தம்பி தெரு, அரியலூர் |
| Age | : | 55 /2024 |

தேதி: 25/03/2024

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது (1 **முதல் 3 எதிரிகள் ஆஜர்** )

நான் தற்போது அரியலூர் வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு வேப்பந்தட்டை வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணியாற்றினேன். கடந்த 16/06/2019 அன்று நள்ளிரவு 12.00 மணியளவில் எங்களது வனச்சரக அலுவலருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வனச்சரகர் எல், குமார் என்பவரது தலைமையில் நானும், வனக்காப்பாளர் குணசேகரன் மற்றும் வனவர் எஸ் குமார் ஆகியோரும் எங்களது இருசக்கர வாகனத்தில் எடுத்துக்கொண்டு வேட்டையாடும் பகுதிக்கு செல்ல இருந்த நிலையில் சீருடை காவலர்களான ஆய்வாளர் கலா மற்றும் உதவி ஆய்வாளர் சிலம்பரசன் மற்றும் முதல்நிலைக் காவலர் ஆகியோர்களையும் எங்களது பணிக்கு அழைத்துச் சென்றோம். அவர்கள் அவர்களின் ஜூப்பில் வந்தார்கள். அரும்பாவூரில் பெரிய ஏரியின் தென்கரைப் பகுதிக்கு ஜுப்

செல்லும் வரை நாங்கள் சென்றோம். பின்பு நாங்கள் ஒத்தையடி பாதையில் நடந்து சென்றோம். அப்போது அங்கு கோண்டா சைன் என்ற TN-46S2640 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் தான் வேட்டை நடைபெறும் என நாங்கள் அங்கேயே பதுங்கி கண்காணித்தோம். சிறிது நேரத்தில் என்னை ஏரிக் கரைப் பகுதியில் நின்று கண்காணித்து உள்ளே யார் நிற்கிறார்கள் என சைகை செய்யும்படி எல், குமார் என்ற வனச்சரகர் உத்தரவிட்டார். அதன்படி நான் அங்கே சென்று பார்த்தபோது இரண்டு மூன்று பேர் பேசிக் கொண்டிருப்பது எனக்கு கேட்டது. இதை நான் சைகையாக வனச்சரகருக்கு காண்பித்தேன். கொஞ்ச நேரத்தில் ஒரு மான் ஏரியில் தண்ணீர் குடித்துவிட்டு தரையில் படித்தது. அதையும் நான் சைகை மூலமாக காண்பித்தேன். 5-10 நிமிடத்தில் ஒரு சப்தம் கேட்டது. நான் அங்கே பார்த்தபோது மான் துள்ளிக் குதித்து ஓடியது. அ.தை கட்டையால் அவர்கள் அடித்ததை நான் பார்த்தேன். அதையும் நான் சைகையாக காண்பித்தேன். அவர்கள் என்னை பதுங்கும்படி சைகை காண்பித்தனர். நானும் அதன்படி பதுங்கிக் கொண்டேன். அவர்கள் மானை தூக்கிக் கொண்டு பைக் அருகில் வந்தனர். எதிரிகளை அவர்கள் சுற்றிவளைத்து பிடித்துக் கொண்டார்கள். நான் பின்னால் சென்றேன். பின்பு இந்த வழக்கிற்கான தேவையான ஆவணங்களை தயார் செய்தார்கள். படிவம் 95 ஐ நான் தான் பதிவு செய்தேன். மேலும் மகஜரிலும் என் முன்னிலையில் எழுதப்பட்ட ஆவணத்திலும் நான் சாட்சியாக கையொப்பமிட்டேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும்(எதிரிகளை சாட்சி சரியாக அடையாளப்படுத்தினார்).

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

sd/-

Judicial Magistrate No.I,

Perambalur.